**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.41/2015**

தேதி . 17.08.2021

பெயர் . கிருஷ்ணப்ப முதலி

த/பெ . மாயாண்டி முதலி

வயது . 50

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

என் ஊரில் செங்குந்தர் முதலியார் இனத்தவர் சுமார் 400 குடும்பங்கள் உள்ளது அதில் A பிரிவு, Bபிரிவு என்று இரு பிரிவுகள் உள்ளது இதில் B பிரிவினை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் A பிரிவு என்றால் சரிதான். B பிரிவை சேர்ந்த அனைவரும் முன் வரவில்லை என்றால் சரிதான். B பிரிவை சேர்ந்த 7 பேர் மட்டும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் மீதயுள்ள பேருக்கும் சேர்த்து தான் நாங்கள் 7 பேரும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு சொந்தம் என்று நாங்கள் ஒப்புகொண்டதால் order 1 R 8படி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. அதனால் வழக்கு சொத்தில் உரிமையும் அனுபவமும் இல்லாததால் உறுத்துகட்டளை கேட்டு தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண் 123/2யை பள்ளிக்காக 1ம் பிரதிவாதி மட்டும் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான் அப்போது அனைவரும் ஒன்றாக இருந்தோம் 2ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். கடந்த 7.1.2010 சீனிவாசன் (DEO) அரசு பள்ளிக்கு எழுதி கொடுத்த தான பத்திரத்தை பி.த.சா.ஆ.3 குறியிடப்படுகிறது. கடந்த 19.11.2011ல் 1ம் பிரதிவாதி தூர்வாசலுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் 2ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான் அது பி.தசா.ஆ4 குறியிடப்படுகிறது. கடந்த 14.7.2014 1ம் பிரதவாதி வெங்கடேசன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் 2ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான் அது பி.தசா.ஆ5 குறியிடப்படுகிறது. கடந்த 16.7.2014ல் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதவாதி கோந்தசாமி, வள்ளியம்மாள்

என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் என்றால் இல்லை. கடந்த 18.4.2014ல் கிராம சபை கூட்டத்தில் 1ம் பிரதவாதி வழக்கு சொத்தில் சம்மந்தமில்லை என்று கையெழுத்து போட்டார் மற்றும் சர்வே எண் தவறாக எழுதப்பட்டது என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. கிரையம் மற்றும் தானம் வாங்கியவர்கள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் இல்லை அது ஊர் அனுபவத்தில் தான் உள்ளது. நான் பொய் சொல்கிறேன் கிரையம் மற்றும் தானம் வாங்கியவர்களை தரப்பினராக சேர்க்கததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பொய்யான வழக்கை தாக்கல் செய்ததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**